## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.62/2015

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இந்துமதி | மதம் | : இந்து |
| க/பெ | : வெங்கடேசன் | ஜாதி | : -- |
| வயது | : 46 | கிராமம் | : கொல்ல குப்பம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**20.01.2025**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கொல்லக்குப்பத்தில் உள்ளது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 1 குழியாகும். 1 குழி என்பது 6, 7 செண்ட் ஆகும். தாவா சொத்து தற்போது காலி நிலமாக உள்ளது என்றால் காலியாக உள்ளது. தற்போது கட்டிடம் போடுகிறோம். தாவா சொத்து தற்போது காலி நிலமாக உள்ளது என்றால் காலியாக உள்ளது. பில்லர் மட்டும் போட்டுள்ளோம். தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் கிராம நத்த புறம்போக்காகதான் இன்றுவரை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்த வரை பிரதிவாதிகள் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றால் தெரியாது.

2. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் கிராம நத்த புறம்போக்காகதான் இன்றுவரை உள்ளது என்றாலும் பிரதிவாதிகள் பெயரில் பட்டா எதுவும் இல்லை என்றாலும் அதில் கிணறு இருந்தது. பக்கத்தில் வீடு இருந்தது. நாங்கள்தான் அனுபவித்து வந்தோம். நான்தான் அந்த வீட்டில் கடைசியாக பிறந்தேன். 1969 ல் பதிவு செய்த உயில் மூலமாகதான் வழக்கு சொத்து எங்களுக்கு வந்தது என்றால் என் சின்ன தாத்தா என் அப்பாவிற்கு உயில் எழுதி வைத்தார். 45 வருடமாகதான் தாவா சொத்தை எங்கள் சொத்து என்று நாங்கள் சொல்கிறோம் என்றால் என் சின்ன தாத்தாவின் அப்பா சொத்து ஆகும். என் சின்ன தாத்தா என் அப்பாவிற்கு எழுதி வைத்துள்ளார்.

3. என் சின்ன தாத்தாவின் அப்பாவின் சொத்து என்பதற்கு பட்டாவோ,

ஆவணங்களோ சமர்ப்பிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. குடும்பத்தில் சொத்து வழிவழியாக வருகிறது. 2ம் பிரதிவாதியான கீதா எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். பாபு என் சகோதரி கீதாவின் கணவர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் எங்களது எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)